பொது நிர்வாகச் சுற்றறிக்கை
இலக்கம்:-04/2011( i)

எனது இல :- CS/ICTS/01/Abs.Committee
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுர்க்கம்
கொழும்பு - 07.
2012.05.16

எல்லா அமைச்சு செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
மாவட்டச் செயலாளர்களுக்கும்,
பிரதேச செயலாளர்களுக்கும்.

**<u>இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவைக்கு உட்சேர்த்துக் கொள்ளுதல்</u>**

2009, டிசம்பர் மாதம் 09-ந் திகதியிடபட்ட இலக்கம் 1631/20 கொண்ட இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2009, டிசம்பர் 08-ந் திகதியிடபட்ட இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை விதிகள் கோவையினை அமுல் நடத்துதல் தொடர்பாக வெளியிடப்பட்ட 15.02.2011 திகதியிடபட்ட அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 04/2011 இன் 5.1 (i) (a) மற்றும் 5.3 (ii) பிரிவுகளை திருத்தம் செய்து 2.5,3.3 என புதுப் பிரிவுகள் இரண்டை உட்படுத்தி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்புரைகளின் படி கீழ்வரும் வகையில் திருத்தப்படுகின்றன.

*02.* 5.1 (i) உபபிரிவு :
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையில் III-ம் வகுப்புக்கு உட்சேர்த்துக் கொள்வதற்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் சேவைகள் விதிகளின் 8.1.1(e) ல் குறிப்பிடப்பட்ட கல்வி பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) கல்வித் தகமை இடைக்காலத்தில் வேண்டிய தடைவைகளில் பூர்த்தியாக்கப்படலாம்.

03. 5.3 (ii) பிரிவு:
“சேவை விதிகளில் 8.6.1(e) ல் பிரிவின் பிரகாரம் படியான தகைமைகளைப் பூர்த்தி செய்திராத சேவையின் 1-ம் வகுப்புக்கு உட்சேர்வதற்கு விண்ணப்பித்துள்ள, 01.07.2009 திகதியன்று தகவல் தொழில்நுட்பம் அல்லது கணனி விடயத்துடன் தொடர்பான பதவியொன்றில் SL 1-2006 அல்லது அதனையொத்த சம்பள அளவுதிட்டத்தில் 15 ஆண்டுகள் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திராத அலுவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைக் காலத்தினுள், அதாவது 31.12.2013 –க்கு முன்னர் தகவல் தொழில்நுட்ப மேற்பட்டப் பின் டிப்ளோமா தகமைகளைப்

பெற்றுக் கொண்டதன் பின்னர் அவர்களை உட்சேர்த்துக் கொள்ளுதற்காகச் சீர்தூக்கிப் பார்க்கப்படும்."

04. 2.5 –ம் பிரிவு:

உறுதியாக கணனி/தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப விடயத்துடன் தொடர்பான பதவிகளுக்காக 09.12.2009 திகதியாகும் போது முறையாகச் சேர்க்கப்பட்டுள்ள போதிலும், இதுவரை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவைக்கு உட்சேருவதற்கு விருப்பம் தெரிவிக்காத எல்லா அலுவலர்களும் சேவைக்கு உட்சேருவதற்கு 08.11.2012-ந் திகதிக்கு முன்னர் விருப்பந் தெரிவித்தல் வேண்டும். விருப்பந் தெரிவித்தல் இலக்கம் 1631/20 கொண்ட 09.12.2009 திகதியிடபட்ட அதி விசேட வர்த்தமானியில் பிரிவு 1-ம் இனணப்பின் படி உரிய திகதிக்கு முன்னர் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு சமர்பிக்கப்படுதல் வேண்டும்.

05. 3.3 –ம் பிரிவு:

08.11.2012-ம் திகதியாகும் போது விருப்பம் தெரிவிக்காத அலுவலர்கள் சேவை விதிகளின் 11.2-ம் பிரிவின் படி கட்டாய ஓய்வு பெறச் செய்தலுக்கு உள்ளாவதுடன் அந்த ஓய்வு பெறச் செய்தல், தொடர்பான நியமன அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

ஒப்பம்./ P.B அபேகோன்

செயலாளர்

அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர்